1967 ஜூன் 24]

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்தப் பழத் தோட்டங்களில் பெயர்ப் பலகை மட்டும் இருந்து, பழச் செடிகளே இல்லாமல் இருக்கும் இடங்களிலே இவற்றை எடுத்துவிடலாம் என்று பஞ்சாயத்து யூனியன்களே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஏற்கனவே அரசாங்கத்திற்கு தெரிந்திருக்கிற தகவலை கனம் உறுப்பினர் கொடுத்ததற்காக நன்றி. (சிரிப்பு)

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, இந்தப் பழத்தோட்டங்கள் அமைத்தது வறுமையைப் போக்க, உணவு நிலைமையைச் சமாளிக்க, அந்தக் காலத்தில், பெரிய நோக்கத்தை வைத்து இந்தப் பழத்தோட்டங்கள் வைக்கப்பட்டன. அப்படி வைத்தால் எத்தனை ஆண்டுகளுக்கு பிறகு பழுக்கும் என்று தெரியுமா ? இன்னும் நன்றாக வளர்வதற்கு முன்னாலேயே பலன் வரும் என்று அமைச்சர்கள் நம்புகிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்தப் பழத் தோட்டங்கள் சில ஆண்டுகளுக்குப் பிறகு நன்மைகளைப் பயக்கும் என்று கனம் உறுப்பினர் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட நன்மைகளோடு, இன்னொன்றையும் சேர்த்துக் கொள்ளலாம். ' மரம் பழுத்தால் வௌவாலை வா என்று அழைப்பாரோ ' என்றபடி, வௌவால்களையும் உற்பத்தி செய்யலாம் என்பதற்குக் கூட திட்டம் போடலாம்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்குப் படி.

*71 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு கொடுக்கப்படும் அலவன்சை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், ஏற்கனவே ஒவ்வொருவரும் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக வருவதற்கு, ரூ. 30,000 அல்லது ரூ. 40,000 செலவு செய்ய வேண்டியிருக்கிறது. சென்ற வருஷம் இந்தி அஜிடேஷன் காரணமாக இன்னும்கூட ஒரு ஆயிரம், இரண்டாயிரம் என்று 60,000 அல்லது 70,000 செலவாகிப் போய் விட்டது. ஆகவே சேர்மன் அலவன்சைக் கூட்டிக் கொடுக்க அனுதாபத்தோடு அரசாங்கம் கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்த அளவிற்குச் செலவழிக்கும் திறன் இருக்கிறவர்கள், இந்தத் தொகையை அரசாங்கத்திலிருந்து எதிர் பார்க்க வேண்டாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : . .

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லுகிறேன். கேள்வியிலே 'இம்ப்யூடேஷன்' இருக்கக் கூடாது. விதியைப் படிக்கட்டுமா? (குரல்கள் : வேண்டாம், வேண்டாம்.) 'இம்ப்யூடேஷன்' இல்லாமல் தாங்கள் கேள்வியை மாற்றியமைக்க முடியுமானால் செய்யுங்கள். இதற்குள் ஆலடி அருணா அவர்கள் ஒரு கேள்வி கேட்பார்கள்.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்ற ஒன்றியப்புத்தலைவர்களுக்குக் கொடுப்பது போன்று அலவன்ஸ் துணைத் தலைவருக்கும் கொடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்த எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : சார், இந்த பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களுக்கு கொடுக்கும் ரூ. 100-ஐ வைத்துக் கொண்டு யூனியன் சேர்மென் தங்களுடைய தொகுதி பூராவும் முறையாக சுற்றிவந்து வேலை செய்யமுடியாது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தஞ்சை ஜில்லாவிலிருந்து, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் ஒரு ரெசல்யூஷன் போட்டு, அலவன்ஸை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டு, போட்டிருந்த தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தப் பிரயாணப்படி கையாளப்படும் முறை, ஒன்று, மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வாங்கிக் கொள்ளலாம். அல்லது எவ்வளவு தூரம் பிரயாணம் செய்கிறார்களோ அந்த அளவிற்கு பிரயாணப்படி முறைப்படி பெற்றுக் கொள்ளலாம். ஆகவே போய்வர அதிகமான வாய்ப்பு இருக்குமானால், அதனால் சிரமம் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாகவும், சட்ட மன்ற உறுப்பினராகவும் இருப்பதால் அவர்களைப் பொறுத்தவரையில், சரிக்கட்டும் நிலையில் தான் இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றிவந்த எல்லா பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் தலைவரும் ஒரே தடவையாக வெளி ஜில்லாக்களுக்கு மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக வெளி ஜில்லாக்களிலிருந்து வேறு கமிஷனர்களைப் போட்டிருப்பதில் ஏதாவது விசேஷ எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கமிஷனர்கள் நிர்வாக வசதிக்காக வெளிமாவட்டங்களுக்கும், வேறு வேறு மாவட்டங்களுக்கும் மாற்றம் செய்யப் படுகிறதேயல்லாமல், ஒட்டுமொத்தமாக, மாற்றுதலுக்காக எதுவும் செய்யப்படவில்லை.

** பேரவைத் தலைமையின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வினுவிற்கு முன்னுல், மாண்புமிகு நண்பர் திரு. ஜேம்ஸ் கேட்ட வினு நம்முடைய பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றப்படும். நடவடிக்கைக் குறிப்பிலும் செய்தித்தாள்களிலும் வெளிவராது என்று 235-வது விதிப்படி அறிவிக்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் வேலைகளில் கழிவு நீர் திட்டம்

***72 வினு—திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய தல முற். பகல்.
நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில 10 00
ளிப்பாரா—.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன்களால் நிறைவேற்றப்பட்டு வரும் சாலை போடுதல், குடிநீர் வசதி செய்தல், பள்ளிக் கட்டடம் கட்டுதல் ஆகிய வேலைகளுடன் கழிவு நீர் திட்டமும் சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேல் மட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்காக ஒதுக்கப்படும் தொகை வீதிகளுக்குப் பைப் லைன் விஸ்தரிப்பதற்கும் செலவிடப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும், அதையொட்டி அந்தப் பகுதியிலுள்ள வீதிகளுக்கு தண்ணீர்க் கிடைக்கக்கூடிய வசதிக்கும் சேர்ந்து இணைக்கப்பட்ட திட்டமாகத்தான் இது செயல்படுத்தப்படுகிறது. ஆகவே அது பற்றிய பிரச்சினைக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் வினுக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நடைமுறைக் கேள்வியை எழுப்ப விரும்புகிருர் என்று நினைக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினையொன்றும் நான் எழுப்பவில்லை. கனம் சபாநாயகருக்கு ஒரு வேண்டுகோள். மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுப் பிரேரணைகள் கொடுப்பதற்குக் குறிப்பிட்ட தேதி தீர்ந்து விட்டது என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும், சட்ட மன்றத்திற்குப் புதிதாக வந்திருக்கக்கூடிய உறுப்பினர்கள் சிலருக்கு நடைமுறைகளெல்லாம் தெரியாத காரணத்தால், வெட்டுப் பிரேரணைகள் கொடுப்பதற்கான கால வரம்பை இன்னும் இரண்டொரு நாள் தள்ளி வைத்தால் நன்ருக இருக்கும் என்கிற என்னுடைய வேண்டுகோளை விடுக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து பேரவையிலே இனிமேல் வேண்டுகோள் விடாமல் இருக்கும்படியாகக் கேட்டுக்